<u>மன்றப்பொருள்</u>

2021 ம் ஆண்டு மே 31.05.2021 ம் தேதி திங்கள் கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெற்ற **சாதாரணக்கூட்டம்** பண்ணுருட்டி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கை.

**திரு.ஜெ. இரவி**
**தனி அலுவலர்.**

1. ஆணையர் (பொ) அவர்களின் மே 2021ம் மாத நாட்குறிப்பேடு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
**அலுவலக குறிப்பு – மன்றம் பதிவு செய்யலாம்**

2 தமிழகபள்ளிகல்வி (ப.க.4.(1)த் துறை அரசாணை (நிலை) எண் 77 நாள்: 13/04/2015ன் படியும், நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவரிகளின் கடிதம் ந.களண்: 32050/ஜெ2/2016–1 நாள்: 07.12.2016 ன்படி நகராட்சி பகுதியில் அமைந்துள்ள அரசு ஆண்கள், பெண்கள், பள்ளிகள் மற்றும் நகராட்சி பள்ளிகளில் உள்ள கழிவறைகள், பள்ளி வளாகங்கள் கடந்த ஆண்டுகளை போலவே இந்த கல்வி ஆண்டும் (2021–2022) ஜுன்–2021 முதல் ஏப்ரல்–2022 வரை" ஜான்சிரணி மகளீர் சுயஉதவிக்குழு" மூலம் பணியாளர்களை நியமித்து மாவட்ட ஆட்சியரக தர ஊதியம் வழிகாட்டுதலின்படி நாள் ஒன்றுக்கு பணியாளர் ஒருவருக்கு ரூ 300/– வீதம் வழங்கிடுவதற்கும், அதற்கான உத்தேசசெலவின்ம ரூ10.00 (ரூபாய்பத்துலட்சம் மட்டும்) மன்றம் அனுமதிவேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு :–</u>

1) மன்றஅனுமதிக்கலாம்.
2) இச்செலவினத்தினை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோ.எண்: 1252/2020/எச்1)**

3 பண்ருட்டிநகராட்சி– நகராட்சி பகுதிகளில் அமைந்துள்ள நகராட்சிக்குச் சொந்தமான நீர் நிலைகளில் 8 நீர் நிலைகளில் உள்ள நீரின் தன்மைகளான (வேதியியமற்றும் உயிரியல்) PH, Temperature, Turbidity, BOD, COD, COD, DO, Salinity. Dissolved or Suspended Nutrients, Dissolved organic, Carbon, Conductivity, Heavy metals and Faecel, Coliform போன்ற தன்மையினை ஆய்வு செய்து அறிக்கை வழங்குமாறு மாவட்ட சுற்று சூழல்பொறியாளர், தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரியம் குடிகாடு, கடலூாருக்கு நாள் 01/02/2021ல் கடிதம் வைக்கப்பட்டது. அதன்படி மேற்கண்ட 8 நீர் நிலைகளில் உள்ள நீரினை மேற்கண்ட துறையின் மூலம் அலுவலர்கள்நேரில் வந்து எடுத்து சென்று தற்போது ஆய்வு செய்து முடிக்கப்பட்டு, இதற்கான பரிசோதனை கட்டணம் ரூ.30,680/– ஆகிறது என மேற்கண்ட தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரிய கடலூர் அலுவலகத்திலிருந்து 18/03/2021 ல் தேதியில் வரப்பொற்ற கைப்பேசி தகவல்படி தெரிவிக்கப்பட்டது. மேற்கண்ட துறைக்கு, மேற்கண்ட தொகையினை குடிநீர் நிதியிலிருந்து செலுத்ததற்போது சட்டமன்ற தேர்தல் நன்னடத்தை விதிமுறை நடைமுறையில் உள்ளதால் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி சட்டவிதி 15ன் கீழ்செலவினம் மேற்கொடதையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிது.

<u>அலுவலகக்குறிப்பு :–</u> மன்றஅனுமதிக்கலாம்.
**(கோ.எண்: 1703/2020/இ1)**

4) பண்ருட்டி நகராட்சி–சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் – பண்ருட்டி சட்ட மன்றத் தொகுதி – 2016–17 முதல் 2020–21 வரையிலான காலத்தில் சட்டமன்றஉறுப்பினர் பரிந்துரை செய்த பணிகளுக்கான தொகை போக மீதமுள்ள வட்டித் தொகையினை கீழ்காணும் பணிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்/ பெருந்தலைவர் மாவட்ட ஊரகவளர்ச்சி முகமைகடலூர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்அ2/1822/20 நாள் 22.02.2021 ந் தேதிகடிதத்தில்நிர்வாகஅனுமதிவழங்கி உத்திரவுவரப்பெற்றுள்ளது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடுரூ.(இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | பண்ருட்டி நகராட்சி வார்டு எண்– 33 திருவதிகை, ராசாபாளையம் காலணி, மயானபாதை தார்சாலை அமைக்க | 25.00 |

மேற்கண்டபணிக்குவரப்பெற்றநிர்வாகஅனுமதியைமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u> மன்றத்தில்பதிவிசெய்யலாம்.

**(கோ.எண்.354/இ1/2021)**

5) பண்ருட்டி நகராட்சி 1 முதல் 33 வார்டுகளுக்கும் புதியகுடிநீர் இணைப்புவழங்கநகராட்சிமற்றும் குடிநீர் வழங்கல்துறைஅரசாணை எண்127 (WS 2) நாள்05.12.2017 ல் செண்டேஜ் சார்ஜ் (ம) குநீர் அபிவிருத்திக் கட்டணத்தை ஆண்டுக்கு ஒருமுறை 12% சதவிதம் உயர்த்தி கொள்ள அரசாணையில் தெரிவிக்கப்படடுள்ளதினற்கிணங்க, புதியகுடிநீர் இணைப்பு வழங்கவும், மேலும் மேற்பார்வைக் கட்டணம் 2021–2022 ம் ஆண்டிற்கு உயர்த்திக் கொள்ளமன்றத்தின் அனுமதிக்குவைக்கப்படுகிறது.

| வ.எண் | நகராட்சிக்குசெலுத்தும் கட்டணம் மீட்டருக்கு | கருங்கல் ஜல்லி (ம) மன்சாலை | தார்சாலை | சிமெண்ட் சாலை |
|---|---|---|---|---|
| 1 | 0–30 மீட்டர் நீளத்திற்கு | ரூ. 2489.00 | ரூ. 5230.00 | ரூ. 6046.00 |
| 2 | 30–90 மீட்டர் நீளத்திற்கு | ரூ. 3838.00 | ரூ. 6634.00 | ரூ. 7437.00 |

1.செண்டேஜ் கட்டணம் ரூ. 790.00

2.மேற்பார்வைகட்டணம் ரூ. 1053.00

<u>அலுவலகக்குறிப்பு:</u> மன்றத்தில்பதிவிசெய்யலாம்.

**(கோ.எண்.583/இ2/2021)**

6) பண்ருட்டி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற இருக்கின்ற சட்டமன்ற பொது தேர்தல் 2021 ல் பொதுமக்கள் 100 சதவீதம் வ்க்களிக்க வேண்டி இந்நகராட்சிக்கு சொந்தமான பேரறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தின் உட்பகுதியில் மாதிரி வாக்குச்சாவடிஅ மைத்தும் அலங்கரிக்கவும், சாமினார் பந்தல் அமைக்கவும், டேபிள், சேர் வாடகை அடிப்படையில் எடுக்கவும், விழிப்புணர்வு பேனர்கள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடத்தியும் விழிப்புணர்வு ஏற்படுத்த கோரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நேரடி அறிவுரையின் பேரில் உள்ளூர் விலைப்புள்ளி மூன்று பெற்று, அதில் குறைவானவிலைப்புள்ளிஅளித்துள்ள திரு. ஜி. வேலாயுதம் திருவதிகை என்பவரின் விலைப்புள்ளிரூ.38,000/– த்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு, மேற்கண்ட பணியை நகராட்சி சட்டபிரிவு– 15ன் கீழ்பணி மேற்கொண்டதையும் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u> மன்றம் அனுமக்கலாம்.

**(கோ.எண்.401/இ1/2021)**

7) பண்ருட்டி–நகாட்சிக்கு சொந்தமான வார்டு– 22 கும்பகோணம் சாலையில் கெடிலம் நதிக்கரையில் அமைந்துள்ள எரிவாயு தகனமேடையை தமிழ்நாடுமாசுகட்டுப்பாட்டுவாரியம் கடலூர், அலுலவகத்தின் மூலம் 2021– 2023ம் ஆண்டுகளுக்கு புதுப்பிக்க கோரி மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக்கட்டு பாட்டு வாரியம் கடலூர்,அலுவலக கடித எண் F,Cud0423/GS/DEE/TNCB/CUD/2012 நாள் 17.04.2021ந் தேதிய கடிதத்தில் Water Act / Air Act சேர்த்து ரூ.10,200/– ஐ வங்கி வரைவோலை மூலம் செலுத்த கோரி கடிதம் வரப்பெற்றுள்ளதைநகர்மன்றத்தின் அனுமதிக்குவைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1) மன்றம் அனுமக்கலாம்.
2) மேற்கண்டசெலவினத்தைநகராட்சிவருவாய்நிதியிலிந்துமேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

**(கோ.எண்.783/இ1/2021)**

8) பண்ருட்டி நகராட்சி–இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 01 முதல் 33 வரையுள்ள பகுதிகளில் இருந்து சேகரிக்கப்பட்டு சுமார் 20 ஆண்டுகளுக்கு மேலாக கெடிலம் தலைமை நீரேற்றும் நிலையம் அருகில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கில் கொட்டப்பட்டிருந்த கழிவுகளை Bio Mining முறையில் அகற்ற வேண்டி, மேற்கண்ட இடத்தில் உள்ள கழிவுகளின் கொள்ளளவை M/s Vertex consulting Engineers Chennai என்றநிறுவனத்தின் மூலம் Topographic and Quantity survey செய்து கொள்ளவும் 14,427 கனமீட்டர் என அறிக்கை பெறப்பட்டது. மேற்கண்ட நிறுவனத்தின் மூலம் பெறப்பட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ள கழிவுகளின் கொள்ளளவான 14,427 கனமீட்டர் அளவை சோதனை (Vetting) செய்து வழங்குமாறு இயக்குநர், சுற்றுச்சூழல்மற்றும் பொறியியல்துறை, அண்ணா பல்கலைக்கழகம், சென்னை–25க்கு நாள் 26.03.2021ல் கடிதம் வைக்கப்பட்டது. அதன்படிஅண்ணா பல்கலைக்கழகம் சென்னை அலுவலகத்தின் Lr.No,0002/CES/DIR/PanrutiMunicipality – 22021-22 நாள் 05.04.2021ந் தேதியிட்ட கடிதத்தில் மேற்கண்ட பணிக்கு Consultancy Fees Rs,1,77,00/– (ரூபாய் ஒரு இலட்சத்து எழுபத்தேழாயிறம்) மட்டும் வங்கி வரைவோலையாக அனுப்பிவைக்க கோரி கடிதம் வரப்பெற்றுள்ளது என்பதனை நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்டசெலவினத்தைநகராட்சிவருவாய்நிதியிலிந்துமேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்
3) பணியின் அவசரஅவசியம் கருதிதனிஅலவலர் முன் அனுமதிபெற்றுதொகைவழங்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம்

**(கோ.எண்.6135/இ1/2015)**

9) பண்ருட்டி நகராட்சி அலுவலகத்தின் மேல் தளத்தில் செயல்பட்டு வரும் பொறியாளர் அறையில் மழைகாலங்களில் மழைநீர் கசிவு ஏற்பட்டு அறையில் உள்ள False ceiling பழுதடைந்தும் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளதாலும் மற்றும் பொறியியல் பிரிவு பகுதியிலும் மழைநீர் கழிவுவதைதடுக்கவும் முதல் தளத்தின் மேற்கூரையில் பழுதடைந்த Weathering course pressed tiles ஆகியவற்றை நீக்கி புதிதாக அமைக்கவும் மற்றும் பொறியாளர் பிரிவின் உட்பகுதியில் Floor Tiles, electrical works epvc window பழைய கேபிள்களை புதுபிக்கவும் மற்றும் வர்ணம் பூசி சீரமைக்கவும் உத்தேசசெலவினம் ரூ. 10.00 இலட்சத்திற்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்டசெலவினத்தைநகராட்சிபொதுநிதியிலிந்துமேற்கொள்ளவும் மன்றம் அனுமதிவழங்கலாம்
3) முன் அனுமதிபெற்றுஒப்பந்தப்புள்ளிகோரியதைமன்றம் அனுமதிக்கலாம்

10) பண்ருட்டி நகராட்சி பொதுசுகாதார பிரிவிற்கு கடந்த நவம்பர் 2020 ல் நிவர் புயலால் பாதிக்கப்பட்ட அனைத்து ,இடங்களிலும், தாழ்வான பகுதிகள், சமுதாய கூடங்கள்,மக்கள் கூடும் இடங்கள், பேருந்து நிலையம், அரசு மருத்துவமனை, கும்பகோணம் சாலை, டைவர்ஷன் ரோடு, காந்திரோடு, ராஜாஜிரோடு மற்றும் 23 எண்ணிக்கையிலான குடிசைப்பகுதிகளிலும் தேங்கியுள்ள மழைநீர் அகற்றுதல் மற்றும் கிருமி நாசினி தெளிப்பதற்கு சுண்ணாம்பு, பிளிச்சிங் பவுடர், முகக்கவசம் ஆகியவை பொதுசுகாதாரம் மற்றும் பொதுமக்கள் நலன கருதியும் பொதுசுகாதார அவசரஅவசியம் கருதியும் உள்ளூர் விலைப்புள்ளி பெற்று வாங்கியதற்கும் அதற்குண்டான தோராய செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் நிர்வாகஅனுமதிவேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்டசெலவினத்தைநகராட்சிவருவாய்நிதியிலிந்துமேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

**(கோ.எண்.1261/எச்1/2020)**

11) பண்ருட்டி நகராட்சி பொதுசுகாதரப் பரிவு, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை உத்திரவில் அறிவுறுத்தப்பட்டுள்ளபடி, தற்பொழுது கோவிட் 19 இரண்டாம் அலை மிகவேகமாகபரவிக் கொண்டிருப்பதாலும், நோய் அனைத்து வயதினரையும் பாகுபாடுயின்றி நோய்வாய்ப்படும் சூழ்நிலை உள்ளதாலும், அவற்றை உடனடியாக கட்டுப்படுத்தும் நடவடிக்கைக்காக முன்களப்பணியாளர்களுக்கு தேவைப்படும் Mask, Gloves, PPE Kit, மற்றும் மார்கெட், பஸ் நிலையம், பொதுமக்கள் கூடும் இடங்கிளில் ஒலிபெருக்கியை நிறுவிபரப்புரை செய்வதற்கும், நோட்டீஸ் அச்சடித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு செய்திடவும், சுண்ணாம்பு, பிளிச்சிங் பவுடர், பினாயில், லைசால், Reflecting Jacket, LCV வாடகை அமர்த்தி கோவிட் 19 விழிப்புணர்வு விளம்பரம் செய்தல், துப்புரவு பணிக்கு BOV வாகனத்தின் அவசியம் கருதி அதற்கான பேட்டரி, சார்ஜர் மற்றும் பழுது பார்பதற்கும், பாதுகாக்கப்பட்டபகுதி அமைக்கவும், கோவிட் Test, கோவிட் தடுப்பு நடவடிக்கைக்கு தேவையான அனைத்து உபகரணங்களும் வாங்கி கட்டுப்படுத்த உத்திரவிடப்பட்டுள்ளது. எனவே, கிருமி நாசினி, பாதுகாப்பு உபகரணங்கள் வாங்கி வழங்கி தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளவும் அதற்குதேவையான தோராய செலவினம் ரூபாய் 30 இலட்சத்திற்கு (முப்பது இலட்சம் மட்டும்) மாநில பேரிடர் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்டசெலவினத்தைமாநிலபேரிடர் வருவாய்நிதியிலிந்துசெலவுசெய்யமன்றம் அனுமதிவழங்கலாம்.

**(கோ.எண்.992/எச்1/2021)**

12) விழுப்புரம் மண்டலம், உதவிஇயக்குநர், நகர் ஊரமைப்புத்துறைஅவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண்.1665/2019/விம நாள்.18.09.2019ல் மனுதாரர் திரு V.ராதாகிருஷ்ணன் மற்றும் திருR.முத்துகுமரன் ஆகியோர்கள் பண்ணுருட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில், வடகைலாசம் கிராமம், புதுசர்வேவார்டு–B. பிளாக்–19,நகரளவு எண் 4,5ல்3.65ஏக்கர் (அல்லது)158994சதுர அடியில் அமைக்கப்பட்டுள்ள**"VMSநகர்''** என்கிற அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு **கொ.ஒ.ம.வ/ந.ஊ.உ.இ (வி.ம) எண்** (R)740/2019 என எண்ணிட்டு கீழ்காணும் விவரப்படி, சில நிபந்தனைகளை விதித்து கொள்கை அளவில் ஒப்புதல் வழங்கியுள்ளார். மேற்படிமனைப்பிரிவின் ஒப்புதல்வரைபடத்தினை**நகர்மன்றத் தீர்மான எண்.518 நாள்.31.03.2020ன்படி**மன்றம் பார்வையிடப்பட்டு, பதிவுசெய்யப்பட்டுள்ளது. மேலும், மனைப்பிரிவில்உள்ளசாலைகள்மற்றும் திறந்தவெளி (OSR) ஒதுக்கீடுகள்பூங்கா-I, பூங்கா-II **(மனை எண் 47 – 1368.00 சதுரடி, மனை எண் 76– 1100.00 சதுரடி, ஆகமொத்தம் 2468.00 சதுரடி)** ஆகியவற்றை 1. திரு.V.ராதாகிருஷ்ணன், 2. திரு. R.முத்துகுமரன் (பவர் ஏஜெண்ட்) ஆகியஇருவரும் சேர்ந்து பொதுமக்கள் உபயோகத்திற்காக உதவி இயக்குநர், மாவட்ட நகர ஊரமைப்புதுறை, கடலூர் அவர்களது பெயரில்தான செட்டில்மென்டாக (Gift Deed) கொடுக்கப்பட்டு ஆவண எண் 785/2021 , தாள் 1 முதல் 22 வரைநாள் 9.3.2021 ல் சார்பதிவாளர், பண்ணுருட்டி அலுவலகத்தில் பத்திரப்பதிவுசெய்யப்பட்டுள்ள நகலினை இந்நகராட்சிக்கு சமர்ப்பித்துள்ளதை பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

மேலும் மனைப்பிரிவில்உள்ள**விற்கப்படாத மனை எண்கள் 48 முதல் 57 வரை, 68 மற்றும் 75 (பரப்பளவு 1997 ச.மீ)**வரன்முறைபடுத்துவதற்கு பரிசீலனைக் கட்டணம் (மனை ஒன்றிற்கு ரூ.500 வீதம்), வரன்முறைப்படுத்தும் கட்டணம்–ரூ.1,79,730/–, வளர்ச்சி கட்டணம்–ரூ.2,99,550/– , நகராட்சிக்கு செலுத்த வேண்டிய மனை அனுமதிகட்டணம் - ரூ,12000/-, C.S.R கட்டணம் - ரூ.12,000/-மற்றும் மனைகளுக்கான காலிமனைவரித்தொகை ஆகியஅனைத்து தொகையினையும் மனுதாரர் 1. திரு.V.ராதாகிருஷ்ணன், 2. திரு. R.முத்துகுமரன் (பவர் ஏஜெண்ட்) ஆகிய இருவரும் செலுத்தி விட்டனர். எனவே, **"VMSநகர்''** என்கிற அனுமதியற்ற மனைப்பிரிவில் உள்ள**விற்கப்படாத மனை எண்கள் 48 முதல் 57 வரை, 68 மற்றும் 75 (பரப்பளவு 1997 ச.மீ)** ஆகியவற்றை வரன் முறைப்படுத்தவும், பத்திரம் பதிவு செய்வதற்குதடையில்லாச் சான்றுமைனைப்பிரிவுதாரர்கள் உடன் கூறியதால்தனிஅலுவலரின் முன் அனுமதியுடன் வழங்கியுள்ளதைமன்றத்தின் அனுமதிக்குவைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. கடலூர் மாவட்டநகர் ஊரமைப்புதுறைஉதவிஇயக்குநர் பெயருக்கு ,மனைப்பிரிவில்உள்ளசாலைகள்மற்றும் திறந்தவெளி (OSR) ஒதுக்கீடுகள்பூங்கா-I, பூங்கா-IIஆயிவற்றைதானசெட்டில்மெண்ட் செய்யப்பட்டபத்திரத்தின் நகலினைமன்றம் பார்வையிட்டுபதிவுசெய்யலாம்.

2. மன்றத்தின் முன் அனுமதி பெற்று விற்கப்படாத மனைகளுக்குவரன்முறை உத்திரவு வழங்கியதையும், பத்திரம் பதிவுசெய்வதற்குதடையில்லாச் சான்றுவழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**கோப்பு எண் 2168/2019/எப்1)**

13) கடலூர் மாவட்டம் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், அவர்களின் செயல் முறை நடவடிக்கைகள் ந.க.எண்.803/2020/க.மா நாள்.12..20 ச.அடி பரப்பளவு கொண்ட மனையிடத்தில் அமைந்துள்ள**"ஜி.கே.மூப்பனார் நகர் விரிவு-1"**என்ற அனுமதிய **03.2021**ல் , மனுதாரர் திருP.சரவணன் மற்றும் எட்டு நபர்கள்,பண்ணுருட்டி ஆகியோர்கள் பண்ணுருட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் வார்டு–A,பிளாக்–33,நகரளவு எண்: **8/2,9/8,9/9,9/10,9/11** – ல் 2.17ஏக்கர் (அ)94525ற்ற மனைப்பிரிவிற்கு **கொ.ஒ.ம.வ/ந.ஊ.உ.இ (கமா) எண்.**R.14/2021எனஎண்ணிடப்பட்டுகீழ்காணும் விவரப்படி, சிலநிபந்தனைகளைவிதித்துகொள்கைஅளவிலானஒப்புதல்வழங்கியுள்ளதைமன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

**<u>மனைப்பிரிவின் ஒதுக்கீடுவிவரம்</u>**

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவுஇடத்தின் மொத்தபரப்பளவு | – | 2.17ஏக்கர் (அ)94525.20 சதுரஅடி |
| மொத்தமனைகளின் எண்ணிக்கை | – | 46 |
| விற்கப்பட்டமனைகளின் எண்ணிக்கை | – | 27 |
| விற்கப்பட்ட மனைஎண்கள் | – | 1 to 25,30,42 |
| விற்கப்படாதமனைகளின் எண்ணிக்கை | – | 19 |
| விற்கப்படாதமனைகளின் எண்கள் | | 26 to 29, 31 to 41, 43 to 46 |
| விற்கப்படாதமனைகளின் மொத்தபரப்பளவு | – | 29187.28 சதுரஅடி |

1. <u>பரிசீலனைக் கட்டணம் விவரம்</u>

| | | |
|---|---|---|
| இணையதளம் வாயிலாக மனை ஒன்றிற்கு ரூ500/-வீதம் பரிசீலினைகட்டணம் செலுத்திய மனை எண்களின் விவரம் | | 20 |

**<u>திறந்தவெளி (OSR) ஒதுக்கீடுகள்</u>**

| <u>ஒதுக்கீடுவிவரம்</u> | <u>பரப்பளவு</u> | <u>விழுக்காடு</u> |
|---|---|---|
| பூங்கா (மனை எண்கள்38 & 39 | 2992.50சதுரஅடி | 10.25 % |

1. **கூராய்வு கட்டணம்** – விற்பனை செய்யப்பட்ட மனைகளுக்கு தனி மனை உரிமையாளரால் கூராய்வு கட்டணம் செலுத்தப்பட்டதற்கான (Registration Slip) நகர் ஊரமைப்பு துறைக்கு சமர்ப்பிக்கப்பட்ட நகல் இணைத்துள்ளார். மனை 20க்கு ரூ500/– செலுத்தியஇரசீதுசமப்பிக்கப்பட்டுள்ளது. **வரன்முறைபடுத்துதல்கட்டணம்** – 17 மனைகளின் எண்ணிக்கைக்குபரப்பளவு2435 ச.மீஅளவிற்குஒருசதுரமீட்டருக்கு ரூ90/- வீதம் ரூ 2,19,150/-ஐ அரசுகணக்குதலைப்பில்வரன்முறைகட்டணம் மனை / மனைப்பிரிவுஉரிமையாளரால் 29.04.2021ல் செலுத்தப்பட்டுள்ளளது.

2. **வளர்ச்சி கட்டணம்**–17 மனைகளின் எண்ணிக்கைக்குபரப்பளவு2435 ச.மீஅளவிற்கு ஒரு சதுரமீட்டருக்கு ரூ150/- வீதம் ரூ 3,65,250/-ஐ மனை / மனைப்பிரிவு உரிமையாளரிடமிருந்து பெற்று உள்ளாட்சிதனிக்கணக்கில் 29.04.2021ல் வரவுவைக்கப்பட்டுள்ளது.

3. **கொள்கை அளவில் ஒப்புதல்** அளிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகள் மற்றும் பூங்கா ஒதுக்கீடுகள் அரசாணை எண் 78 வீட்டு வசதிமற்றும் நகர்புறவளர்ச்சித் [UD(3)]துறைநாள்04.05.2017 ன்படி, உள்ளாட்சிக்கு தன்னிச்சையாக உரிமையுடையதாகிறது. மனுதாரரிடம் தானமாக ரூ100/– முத்திரை தாளில் உதவி இயக்குநர், கடலூர் நகர் ஊரமைப்புத்துறை அவர்கள்பெயரில்ஆவண எண்.715/2021 நாள்.25.02.2021ல் தானமாகவழங்கியுள்ளார்.

<u>**நிபந்தனைகள்**</u>

1. **நில உரிமம்** குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள்சரியானவையல்ல என அறியப்பட்டால் (அ) மனைப்பிரிவிற்கு கொள்கைஅளவிலானஒப்புதல் வழங்கியதால் பாதிப்புஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டாலும், நீதிமன்றவழக்குகள்உரிமைசம்மந்தமாகவருமாயின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல்எவ் விதமுன்னறிவிப்புயின்றி ரத்துசெய்யப்படும்.

<u>**அலுவலக குறிப்பு**</u>

1. நகர் ஊரமைப்புதுறை உதவி இயக்குநர், கடலூர் மாவட்டம் அவர்களின் கொள்கை அளவிலான மனைப்பிரிவின் ஒப்புதல் வரைபடத்தினைமன்றம் பதிவுசெய்யலாம். **(கொ.ஒ.ம.வ/ந.ஊ.உ.இ (கமா) எண்.**R.14/2021
2. அரசாணைகளின்படியும், மனைப்பிரிவுதாரர்கள் விற்கப்படாதமனைகளுக்கு தடையின்மைச்சான்று வழங்கவில்லை எனில் மனையை கிரயம் பெறுபவர் தொகையைதிரும்பகேட்கும் நிலைஏற்படும் எனவும், நிதிநெருக்கடியைதவிர்க்க அனுமதிகோரி **29.04.2021**ல் மனு செய்துள்ளதால் தனிஅலுவலர் முன்அனுமதி நாள்.**29.04.2021**ல் வழங்கியதின் பேரில் விற்கப்படாதமனைகளுக்கு மனைவரன்முறை உத்திரவு வழங்கப்பட்டதை அனுமதிக்கலாம்.

**(கோ.எண்620/2021/எப்1)**

**14)** பண்ருட்டி நகராட்சி எல்லைக்குட்பட்டுள்ள வார்டு A பிளாக்– **33**, TSNo **2/2**, **4.09.6** ஹெட்டர் பரப்பில்சுமார் **179** வீடுகள் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக வரவாய் வட்டாட்சியர் பண்ருட்டி அவர்கள் ந.க.எண் எ**1/567/2018** நாள் **06.02.2018** கடிதத்தடன் இணைத்து வரப்பெற்றுள்ளது. அதன் பேரில்மேற்படிஇடம் நகராட்சி எல்லைக்கட்பட்ட சின்னஏரிஅரசுபுறம் போக்குஇடமாகஇருப்பதால்Public premises Act 1975 ன்படி அறிவிப்பு Form A நகராட்சி வழங்கறிஞரின் அறிவுரைப்படி ஆக்கிரமிப்புதாரர்களுக்குஅறிவிப்புவழங்கப்பபட்டுள்ளது.

இவ்வழக்கு சென்னை உயர்நீதிமன்ற பொதுநலவழக்கு இருப்பதால்நகராட்சி சார்பாக சென்னை உயர்நீதிமன்றவழக்கறிஞர் பி. சீனுவாஸ் அவர்கள்ஆஜராகியுள்ளார். எனவே, வழக்கினை ஏற்று நடத்தவும், அதற்கானவழக்கறிஞர்கட்டணம் ரூ.**15000/–** மன்றம் வழங்கஅனுமதிக்குவைக்கப்படுகிறது.

<u>**அலுவலகக்குறிப்பு:**</u>

**1)** பொதுநல இவ்வழக்கினை ஏற்று சார்பாகநடத்திதரகோரலாம்.
**2)** அவசரஅவசியத்தைமுனனிட்டுசென்னைஉயர்நீதிமன்றவழக்கறிஞர் திரு. பி. சீனுவாஸ் என்பவருக்குவழக்கறிஞர் கட்டணம் ரூ**15000/–** வழங்கலாம்.

**(கோ.எண்.165/எப்1/2018)**

**15.** பண்ணுருட்டி நகராட்சிக்குட்பட்ட கீழ்கண்ட இடங்களில் குடிநீர் பற்றாக்குறை உள்ளதாக பொது மக்களிடமிருந்து தொடர்ந்து புகார்கள் வந்ததையடுத்து பொது மக்களின் குடிநீர் அத்தியாவசியம் கருதி .ழ்கண்ட பணிகளுக்கு ரூ.10.00 இலட்சம் மதிப்பீடு தயார் செய்து ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டது.

1. வார்டு எண் 32 இருளங்குப்பத்தில் ஏற்கனவே உள்ள ஆழ்துணை கிணற்றில் 15HP மோட்டார் பொருத்தி குடிநீர் குழாய் புதியதாக அமைத்து OHT க்கு ஊந்தும் பணி.

2. வார்டு எண் 2 நகராட்சி துவக்கப்பள்ளியில் அமைக்கப்பட்ட ஆழ்துளை கிணற்றில் 15HP மோட்டார் பொருத்தப்பட்டு நகரில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு குடிநீர் ஊந்தும் பணி.

3. வார்டு எண் 26 மணிநகர் உரக்கிடங்கில் உள்ள ஆழ்துணை கிணற்றில் 10 HP மோட்டார் பொருத்தி குடிநீர் பிரதான குழாயில் இணைப்பு வழங்குதல்.

4. வார்டு எண் 12 செட்டிப்பட்டறை காலணியிலிருந்து வார்டு எண் 11 அசோக் நகருக்கு பிரதான குடிநீர் குழாய் அமைத்து இணைப்பு வழங்குதல்.

மேற்கண்ட பணிகளுக்கு 17.9.2020 ல் ஒப்பந்தபுள்ளி கோரியதில் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரர் திரு.R.ராம்குமார் என்பவரின் ஒப்பந்தபுள்ளியை 30.09.2020 அன்று நடைபெற்ற மன்றத்தில் அனுமதி பெற்று 1.10.2020 அன்று பணி ஆணை வழங்கப்பட்டது.

மேற்கண்ட பணிக்கு பணி ஆணை பெற்று பணி துவங்காமல் இருந்ததற்காக ஒப்பந்ததாரருக்கு பலமுறை அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டது.

அவ்வறிவிப்பு கடிதங்களுக்கு 26.05.2021 அன்று கொரோனா தொற்று பரவல் காரணமாக பணியாளர்கள் வராததாலும், கட்டுமான பொருட்களின் விலை உயர்வாலும் ஒப்பந்தப்புள்ளியில் என்னால் தெரிவிக்கப்பட்ட விலையில் பணி செய்ய இயலாது. என கடிதம் அளித்துள்ளார்.

எனவே மேற்கண்ட பணிக்கான பணி ஆணையை ரத்து செய்து, ஒப்பந்ததாரரின் EMD 1% தொகையை திரும்ப வழங்காமல் பொது நிதிக்கு ஈடு செய்து கொள்ளவும். மேலும், மேற்கண்ட பணிக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோரும் பட்சத்தில் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட மதிப்பீடு ரூபாயை விட அதிகமானால் அத்தொகையை மேற்கண்ட ஒப்பந்ததாரரின் கணக்கிலிருந்து பிடித்தம் செய்யவும் மன்றத்தின் அனுமதிக்குவைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு 1. மன்றம் அனுமதிக்கலாம்

இடம்– பண்ணுருட்டி நகராட்சி
நாள்– 31–05–2021

ஆணையாளர் (ம) தனி அலுவலர்
பண்ணுருட்டி நகராட்சி.